பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை 13.05.2025 கதிர் 185

## இது ரகசியம் அல்ல!

தமிழ் காங்கிரஸின் நேற்றைய அறிவிப்புடன் வடக்கில் பெரும்பாலும் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களை தமிழ்க் கட்சிகள் கைப்பற்றுவது தெளிவாகத் தெரிகிறது. ☞ 2

## கொழும்பில் என்பிபி ஆட்சிதான் அமைச்சர் ஹேரத் திட்டவட்டம்

கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும். ஐக்கிய மக்கள் சக்தி குறைவான ஆசனங்களை பெற்றுள்ளதோடு மாத்திரமின்றி, அக்கட்சியின் மேயர் வேட்பாளர் தொகுதியிலும் தோல்வி அடைந்துள்ளார். எனவே, அவர்களால் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்க முடியாது என வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட தன்பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைக்கப் போவது யார் என்பதைக் காணப் பெரும்பாலானவர்கள் காத்திருக்கின்றனர்.

கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியிலிருந்தே அதிகளவான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். 48 உறுப்பினர்கள் எமது கட்சியைச் சேர்ந்தவர்கள். ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 29 உறுப்பினர்கள் மாத்திரமே தெரிவு ☞ 2

## உள்ளாட்சி சபைகளில் ஆட்சி அமைக்கும்

# தமிழ் அரசின் நிலைப்பாட்டை ஆதரிக்கக் காங்கிரஸ் முடிவு

### கஜேந்திரகுமார் நேற்று அறிவிப்பு

வடக்குகிழக்கில் உள்ள சபைகளில் தனித்து அதிக ஆசனங்களக் கொண்டிருக்கும் கட்சிகள் ஆட்சியமைக்க உரிமை கோருவது என்ற தமிழ் அரசுக் கட்சியின் முடிவுக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் ஆதரவு தெரிவித்துள்ளது. தாம் அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள சபைகளில் ஆட்சியமைக்க உரிமை கோருவதுடன் மற்றைய சபைகளில் தமிழ்க் கட்சிகள் ஆட்சியமைப்பதை எதிர்க்கப்போவதில்லை என்று கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரையில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின் நடுவே செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கடந்த உள்ளூராட்சித் தேர்தலை தம் தனியே சந்திப்பதற்குத் தீர்மானித்திருந்தார்கள்.

தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருந்த ☞ 8

## தமிழின அழிப்பு நினைவகம் பற்றி அறிக்கை கோர இலங்கை முடிவு

கனடாவின் பிரம்டன் நகரில் தமிழின அழிப்பு நினைவகம் அங்குராட்பணம் செய்யப்பட்டுள்ள நிலையில், அதுதொடர்பில் இலங்கைக்கான கனடிய உயர்ஸ்தானிகரகத்திடமிருந்து விசேட அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாக அயலுறவுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

மே 10 சனிக்கிழமை கனடாவின் பிரம்டன் நகரில் தமிழின அழிப்பு நினைவகம் திறந்து வைக்கப்பட்டது.

கனடியத் தமிழர் தேசிய அவை இந்த நினைவகத்தை முன்னின்று அமைப்பதற்கான நடவடிக்கைளை எடுத்திருந்தது. கனடிய பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் விசேட கவனம் எடுத்து அதனை திறந்து வைத்திருந்தார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிட்ட நாதன், ஒன்ராறியோவின் சுகாதார அமைச்சின் உளநலத்துறை இணை அமைச்சரும், ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான மாநில சட்டமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வின் காணொளி சமூக ஊடகங்கள் வாயிலாக பகிரப்பட்டுள்ள நிலையில், குறித்த நினைவகம் தமிழீழ அடையாளத்தை பிரதிபலிப்பதால் அதுதொடர்பில் விளக்கம் கோருவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது,

## 22 பேர் இறந்த ரம்பொட விபத்துக்கு இயந்திரக் கோளாறு காரணமில்லை

கொத்மலை, ரம்பொட, கெரண்டியெல்ல பகுதியில் 22 பேரின் உயிரைப் பறித்த விபத்து, பேருந்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக நிகழவில்லை என்றும் பேருந்தில் அளவுக்கு மீறிய பயணிகள் பயணித்தமை மற்றும் அதிக களைப்பு காரணமாக சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டமை ஆகியவையே விபத்துக்குக் காரணமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாக நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் ஜாலிய பண்டார தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இச்சம்பவம் தொடர்பாக விசேட குழு மூலம் தற்போது விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார். அதன்பின்னர், விபத்துக்கான உறுதியான காரணங்கள் வெளிப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொத்மலை, ரம்பொட, கெரண்டிஎல்ல பகுதிகளில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் உயிரிழந்த நான்கு பேரின் உடல்களை கொத்மலை வைத்தியசாலையிலிருந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ☞ 2

## செலவு விவரங்களைச் சமர்ப்பிக்க தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 21 நாட்களுக்குள் தேர்தல் பிரசார செலவுகள் தொடர்பான விவரங்கள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் உறுதிப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்ற அதிகார ☞ 2

## ரூ. 87 மில்லியன் பெறுமதியான கஞ்சா பொதிகள் மன்னாரில் மீட்பு

மன்னார், பேசாலை கடற்கரை பிரதேசத்தில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின்போது, 87 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மன்னார், பேசாலை கடற்கரை பிரதேசத்தில் இலங்கை கடற்படை நேற்று முன்தினம் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது 218 கிலோ, 800 கிராம் கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் ஆளில்லாத நிலையில் ☞ 8

## ரணிலிடமிருந்த தற்றுணிபுகூட அநுரகுமாரவிடம் கிடையாது

### விமல் வீரவன்ச சீற்றம்

இந்தியாவுடன் கைச்சாத்திடப் பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்த ஆளும்தரப்புப் பகிரங்கப்படுத்தும் என்ற நம்பிக்கை கிடையாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் ☞ 2

## கள்வர்கள் என விமர்சித்தவர்களை விலைக்கு வாங்க என்.பி.பி முயற்சி

### முன்னாள் எம்.பி. தொலவத்த சுட்டிக்காட்டு

ஆளும்தரப்பு தற்போது அதிகார மோகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக, தாம் முன்னர் கள்வர்கள் என விமர்சித்த உறுப்பினர்களையே விலைக்கு வாங்க முற்படுகிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியைத் தவிர ஏனைய அனைவரும் கள்வர்கள், ஊழல்வாதிகள் என்பதே ஆளும்தரப்பின் தீவிர பரப்புரையாக இருந்தது. ஆனால் இன்று தாம் கூறியவற்றை மறந்து, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நிலைமைக்கு ஆளும்தரப்பு தள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சபைகளிலும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தீர்மானம் எடுப்பதற்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

ஆளும்தரப்பு தற்போது அதிகார மோகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக கள்வர்கள் என விமர்சித்த உறுப்பினர்களை விலைக்கு வாங்க முற்படுகிறது. ☞ 8

## குருந்தூர்மலையில் தமது நிலத்தை பண்படுத்திய 3 விவசாயிகள் கைது

### பிக்குகளின் முறைப்பாட்டையடுத்து பொலிஸார் நடவடிக்கை

குருந்தூர்மலை அடிவாரத்தில் தமது பூர்வீக விவசாய நிலங்களில் பயிற்செய்கை மேற்கொள்ளும் நோக்கில் கடந்த 10.05.2025 அன்று தமிழ் விவசாயிகள் மூவர் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டபோது, தொல்லியல் பகுதிக்குள் பண்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

பௌத்த பிக்குகள் பொலிசாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிசார் விவசாயிகள் மூவரையும் கைது செய்தனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட விவசாயிகள் மூவரில் ஒருவர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார். ஏனைய இருவரையும் விளக்கமறியலில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆளும் என்பிபி தனது கொள்கைகள், கோட்பாடுகள், தூய்மையாளர் வேடம் என்பவற்றைத் தூக்கி எறிந்துவிட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்களையும் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்களையும் பணத்திற்கும் சலுகைகளுக்கும் வாங்கிக் கொண்டால் தவிர எந்தவொரு சபையிலும் அது ஆட்சியைத் தக்க வைப்பது சாத்தியமானதில்லை.

அப்படியிருந்தாலும் இந்தத் தேர்தலில் தங்களுக்கு இரண்டாம் இடம் கிடைத்திருப்பதையிட்டு என்பிபி பெருமைப்பட்டுக்கொள்கிறது. அது பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. தமிழ் அரசியல் பரப்பில் எப்போதுமே உரிமை அரசியலுக்கான ஆதரவு இருக்கும் அளவிற்கு சலுகை அரசியலுக்கான ஆதரவும் இருந்து வந்திருக்கவே செய்கிறது. ஆளும் தரப்புக்கு வாக்களிப்பதும், அதனை ஆதரிப்பதும் தமக்கு பல நன்மைகளைப் பெற்றுத் தரும் குறிப்பாக வேலை வாய்ப்பு, அபிவிருத்தி உள்ளிட்ட நன்மைகள் கிடைக்கப்பெறும் என்று கருதி வாக்களிப்போர் நம் மத்தியில் கணிசமான அளவில் இருக்கவே செய்கின்றனர்.

இம்முறை கொழும்பில் என்பிபி ஆட்சியில் இருப்பதால் அவர்கள் எல்லோரும் உள்ளாட்சி சபைகளிலும் அந்தக் கட்சியையே ஆதரித்துள்ளனர். அடுத்த தடவை வேறு கட்சி ஆட்சியில் இருந்தால் அந்தக் கட்சியையோ அல்லது அதனது முகவராக வடக்கில் நிற்கும் தமிழ்க் கட்சிகளையோ ஆதரிப்பார்கள். யாழ்ப்பாணம் மாநகர சபையை ஈபிடிபி ஆட்சி செய்த வரலாற்றையும் நாம் இந்தத் தருணத்தில் ஞாபகப்படுத்திப் பார்ப்பது அவசியம். அதுபோன்றே இப்போது என்பிபிக்கும் கணிசமான வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அது அந்தக் கட்சிக்கான வாக்கு வங்கியல்ல. எதிர்காலத்தில் தமது செயற்பாடுகள் மூலம் அவர்கள் இங்கும் ஒரு வாக்கு வங்கியை உருவாக்கக்கூடும். ஆனால், இப்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு விழுந்த வாக்குகளை அவர்களுக்குத் தமிழ் மக்கள் வழங்கிய அங்கீகாரமாகக் கொள்ளத் தேவையில்லை.

இது அவர்களுக்கும் புரியும் என்பதால்தான் எப்பாடு பட்டாவது வடக்கில் ஒரு சபையையேனும் தாம் கைப்பற்றிவிடுவதற்கு அவர்கள் தலைகீழாக நிற்கிறார்கள்.

இந்தத் தேர்தல் முடிவுகளை என்பிபியினர் தமிழ் மக்கள் தமக்குத் தந்த அங்கீகாரமாகக் காட்டுவார்களாயின், மறுவழத்தில் எங்களுக்கு அபிவிருத்தியே வேண்டாம் போடா என்று தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு பதிலளித்துள்ளதாகவும் வியாக்கியானம் செய்யமுடியும். என்பிபியின் வசம் இல்லாத சபைகளுக்கு நிதி ஒதுக்க ஒன்றுக்குப் 10 தடவைகள் யோசிப்பேன் என்று ஜனாதிபதி வடக்கு கிழக்கில் மிரட்டிய பின்னரும் அவரது கட்சிக்கு வாக்களிக்காது தமிழர்கள் புறக்கணித்தார்கள் என்றால் அபிவிருத்தி வேண்டாம் என்று அவர்கள் சொன்னார்கள் என்பதாகத்தானே பொருள். ஆனால் உண்மை அப்படிப்பட்டதல்லவே, இதுபோன்ற குதர்க்க விளக்கங்கள், வியாக்கியானங்களை விடுத்து, தமிழ் மக்களின் ஆதரவைப் பெறவேண்டுமானால் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நேர்மையான, உண்மையான நடவடிக்கைகளை என்பிபி எடுககவேண்டும். ஆனால் அதைச் செய்யும் திராணி அவர்களுக்குக் கிடையாது என்பதை அடித்துச் சொல்லலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ் அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதியில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தமிழ்த் தேசிய பேரவையுடன் தேர்தலுக்குப் பின்னர் இணைந்து ஆட்சியமைப்பது குறித்து கூறியிருந்தார்கள். அந்தப் பின்னணியில் நாம் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடன் பேசி கொள்கையளவில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதன் ஊடாக அதன் பின்னர் தமிழரசுக் கட்சியுடனும் பேசும் நோக்குடன் அவர்களை அணுகியிருந்தோம். இந்நிலையில் தாம் தமது பங்காளிக் கட்சிகளுடன் பேசி ஒரு முடிவை அறிவிப்பதாக சொன்ன போதும் எமக்கு ஒரு முடிவும் அறிவிக்கப்படவில்லை.

தமிழ்த் தேசிய பேரவை இத்தேர்தலில் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய மூன்று சபைகளில் அதிகூடிய வாக்குகளுடன் வென்றிருக்கிறோம். ஊர்காவற்றுறையில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குள் தமிழ்த் தேசிய பேரவை முன்னிலை வகிக்கிறது.

அந்தவகையில் இந்த நான்கு சபைகளிலும் தவிசாளர் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானித்திருக்கிறோம். ஏனைய சபைகள் குறித்து இதுவரை மற்றக் கட்சிகளுடன் எவ்வித புரிந்துணர்வும் எட்டப்படாத நிலையில், குறித்த சபைகளில் பெரும்பான்மை ஆசனங்களை எடுத்த தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கோரப்படும் சபைகளில் ஆதரவு வழங்குவது எனவும், ஆதரவு கோரப்படாத இடங்களில் தமிழ்த் தேசியக் கட்சிக்களுக்கு எதிராக போட்டியிடாமல் இருப்பது எனவும் தீர்மானித்திருக்கின்றோம்.

இதேவேளை, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய பேரவை ஆகிய கட்சிகளுக்கு இடையில் கொள்கை ரீதியாக ஓர் இணக்கப்பாடு எட்டினால் ஒற்றுமை முயற்சியை ஒருதலைப் பட்சமாக முறித்துக்கொண்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு ஓர் அழுத்தத்தை ஏற்படுத்தும்.

அதேநேரம், தமிழ் மக்கள் இம்முறை தமிழ்த் தேசியத்துக்கே வாக்களித்துள்ளார்கள். அவர்கள் எந்தவொரு தனிக்கட்சிக்கும் தனித்து ஆணை வழங்கவில்லை. தமிழ்த் தேசியத் தளத்தில் உள்ள கட்சிகளுக்குத்தான் வாக்குகளை பெரும்பான்மையாக வழங்கியுள்ளார்கள்.

அந்த வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்காக அளிக்கப்பட்டவை. ஆகவே தமிழ்த் தேசியம் சார்ந்த இணக்கப்பாடு என்பது முக்கியமானது. அவ்வாறான ஓர் இணக்கத்தின் ஆடிப்படையில்தான் கூட்டு ஆட்சியை உருவாக்க முடியும். அதனை விடுத்து வெறுமனே பதவிகளுக்காகவும், ஆட்சி அதிகாரத்துக்காகவும் கூட்டிணைவதால் எவ்விதமான பயனுமில்லை.

ஆகவே தான், ஜனநாயத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து கொள்வதன் ஊடாக தமிழ் அரசுக் கட்சிக்கு அழுத்தங்களைப் பிரயோக்கித்து நாம் அத்தரப்புடன் இணைந்து செல்வது தொட்பில் பேச்சுக்களை முன்னெடுக்கவுள்ளேன்.

இனத்தின் நன்மைக்காகவே தாம் இவ்வாறான விடயங்களை முன்வைப்பதாகவும், இது ஆட்சி அதிகாரங்களுக்கு அப்பால்பட்ட விடயமாகும் - என்றார்.

## ரணிலிடமிருந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்றுணிவுடன் செயற்பட்டார். அந்த தற்றுணிபு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு கிடையாது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி பொய் மற்றும் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்தது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் தவறான அரசியல் தீர்மானம் எடுத்ததை மக்கள் தற்போது விளங்கிக்கொண்டுள்ளார்கள். அதனையே நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பெரும்பான்மை பலம் உள்ளது என்ற ஆணவத்தில் ஆளும்தரப்பு தான்தோன்றித்தனமாக செயற்படுகிறது. 2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்புக்கும் பெரும்பான்மை பலம் இருந்ததையும், அந்தப் பலம் இரண்டாண்டுக்குள் பலவீனமடைந்ததையும் ஆளும்தரப்பு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவுடன் ஆளும்தரப்பு அண்மையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் விவரங்கள் இதுவரையில் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. இவ்விடயத்தில் ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாயின் அதற்கு இந்தியாவின் அனுமதியை பெற வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது. கடந்த காலங்களில் இதனைக் காட்டிலும் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பல ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்த ஆளும்தரப்பு பகிரங்கப்படுத்தும் என்ற நம்பிக்கை கிடையாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்றுணிபுடன் செயற்பட்டார். அந்த தற்றுணிபு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு கிடையாது.

சர்வதேசநாணயநிதியத்தின் விவகாரத்தில் ஆளும்தரப்பு நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளுக்கும் அடிபணிந்துள்ளது. மின் கட்டண அதிகரிப்பு ஊடாக இதனை எதிர்வரும் மாதமளவில் விளங்கிக்கொள்ள முடியும் என்றார்.

## செலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளின் நான்கு ஆண்டு பதவிக்காலம் 2025.06.02 ஆரம்பமாகும். ஆகவே கொழும்பு மாநகர உட்பட ஏனைய மாநகர சபைகளில் ஆட்சியமைப்பதில் தோற்றம் பெற்றுள்ள சிக்கல்களுக்கு உடன் தீர்வு காண வேண்டியது அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

339 உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளுக்கான வாக்கெடுப்பு 2025.05.06 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி 265 அதிகார சபைகளையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 35 அதிகார சபைகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 14 அதிகார சபைகளையும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6 அதிகார சபைகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியன முறையே 3 அதிகார சபைகளையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 2 அதிகார சபைகளையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஆகியன தலா 1 அதிகார சபையையும் பெற்றுக்கொண்டன. 4 சுயேச்சைக் குழுக்கள் தலா 1 அதிகார சபையைக் கைப்பற்றிக்கொண்டன.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் முடிவுகள் கடந்த புதன்கிழமை (7) உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன. 2023ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் முடிவடைந்து 21 நாட்களுக்குள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தேர்தல் பிரசாரம் தொடர்பான செலவு விவரத்திரட்டை உறுதிப்படுத்தப்பட்ட வகையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் சார்பில் 75,589 பேர் போட்டியிட்டனர். பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு பிரசுரித்த விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2025.06.02 முதல் ஆரம்பமாகும்.

அதற்கமைய உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளின் முதல் கூட்டம் ஜூன் 2 கூடவேண்டும். கொழும்பு மாநகர சபை உட்பட ஒருசில மாநகர சபைகளில் தோற்றம் பெற்றுள்ள சிக்கல்களுக்கு தீர்வு காண்பது அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களது மாநகர மேயர் வேட்பாளர் தொகுதியில் தோல்வியடைந்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் இளம் வேட்பாளருடன் போட்டியிட்டு அவர் தோல்வி அடைந்திருக்கின்றார்.

தொகுதியில் மேயர் வேட்பாளர் தோல்வியடைந்துள்ள நிலையிலும், மாநகர சபையில் ஆட்சியமைக்கப் போவதாகக் கூறுவதற்கு வெட்கமில்லையா? அவர்கள் முயற்சித்தாலும் அதற்கான வாய்ப்பு இல்லை. கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.

மாநகர சபை, நகரசபை அல்லது பிரதேச சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்திக்கும் யாருக்கும் எந்த சிறப்புரிமைகளையோ பணத்தையோ வழங்கி எவரையும் விலைக்கு வாங்கப் போவதில்லை என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன். உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் மோசமான பழைய முறைமை எமது ஆளும்தரப்பு ஒருபோதும் பின்பற்றாது.

நாம் பெற்றுக்கொண்டுள்ள வெற்றியை பலப்படுத்துவதற்கு ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் அவர்களுடன் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொண்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு தயாராக இருக்கிறோம் என்றார்.

## 22 பேர் இறந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்டு அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி மருத்துவமனை மருத்துவர் ஜனக சோமரத்ன தெரிவித்தார்.

விபத்தில் காயமடைந்த ஐந்து பேர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தற்போது சிகிச்சை பெறுபவர்கள் ஆபத்தான கட்டத்தினைக் கடந்திருக்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, விபத்துக்குள்ளான பேருந்து தற்போது கொத்மலை பொலிஸ் மைதானத்தில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர், கதிர்காமம் டிப்போவின் விசாரணை அதிகாரிகள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் பேருந்து தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக நேற்றையதினம் பிரசன்னமாகியிருந்தனர்.

கொத்மலை பொலிஸ் பரிசோதகர் வஜிர தேவப்பிரிய, பேருந்தை ஆய்வு செய்து, பின்னர் வழங்கப்படும் அறிக்கைகளை எதிர்கால பணிகளுக்குப் பயன்படுத்துவோம் என்றும், அதுவரை, இந்த விபத்து தொடர்பான உண்மைகளை வரும் புதன்கிழமை நீதிமன்றத்தில் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் நிலைமைகளை நேரில் கண்டறிய நேற்று முன்தினம் பிற்பகல் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கம்பளை மற்றும் பேராதனை வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்தார். அங்கு, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் சிகிச்சை பெறும் அனைத்து நோயாளிகளுக்கும் உடனடி சிகிச்சை அளிக்கத் தேவையான வசதிகள் குறித்து பிரதமர் விசேட கவனம் செலுத்தினார்.

அங்கு செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதமர்,

இது மிகவும் துன்பகரமான நிகழ்வு. இது போன்ற விடயங்களைத் தாங்கிகொள்வது மிகவும் கடினமானதாகும். சிறுவர்கள், பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களை இழந்திருப்பது வேதனையானது. எமது நாட்டில் தினமும் ஏராளமான போக்குவரத்து விபத்துகள் நடக்கின்றன. இவற்றைத் தடுக்க எமது போக்குவரத்து அமைச்சர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்த நேரத்தில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அளித்துவருகின்ற எமது வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களுக்கு நான் குறிப்பாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அதுபோன்று தங்கள் எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நோயாளிகளை வைத்தியசாலைகளுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்த அனைவரையும், அந்த மனிதாபிமானப் பணியை முன்னெடுத்த அனைவரையும் நான் நினைவுகூர விரும்புகிறேன். இதுதான் எமது நாட்டின் தனித்துவம்.

இந்த மனிதப் பண்புகளை நாம் பாதுகாக்கவேண்டும். இந்த நேரத்தில், ஆளும்தரப்பு முடியுமான அனைத்தையும் செய்வதை உறுதி செய்வதற்காக நாங்கள் தலையிடுகிறோம் என்று நான் கூற விரும்புகிறேன். இந்த நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

## குருந்தூர்மலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்ததாவது:

குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாய நிலத்தைப் பண்படுத்திய குற்றச்சாட்டில்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# இலங்கையின் முதல் ஹஜ் குழு புறப்பட்டது: சவூதி அரேபிய தூதர் வழியனுப்பிவைப்பு

(நூருல் ஹுதா உமர்)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இலங்கையிலிருந்து சவூதி அரேபியாவை நோக்கி பயணிக்கின்ற முதல் ஹஜ் குழுவை வழியனுப்பும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கலந்து கொண்டு ஹாஜிகளை வழியனுப்பி வைத்தார். இதன் போது கருத்து தெரிவித்த சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி -

அனைத்து உலக முஸ்லிம்களாலும் போற்றி விரும்பப்படுகின்ற இஸ்லாத்தின் ஐந்தாவது முக்கிய கடமையான ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக பயணிக்கும் ஹாஜிகளை வழியனுப்பி வைக்கும் நியழ்வில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சவூத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் சவூதி அரேபிய அரசாங்கம், ஹஜ்ஜுக்காக வரும் அல்லாஹ்வின் விருந்தினர்களுக்குப் பணியாற்றுவதில் முழுமொத்த பங்களிப்பையும் தவறவிடாமல் செயல்பட்டு வருகிறது. ஹஜ் யாத்திரிகர்கள் சவூதிக்குள் வந்ததிலிருந்து தத்தமது நாட்டுக்கு திரும்பும் வரை அனுபவிக்கும் நலன், பாதுகாப்பு மற்றும் வசதிகளை உறுதிப்படுத்துவதற்கு நாட்டின் அனைத்து வளங்களையும் சவூதி அரசாங்கம் பயன்படுத்துகிறது.

இந்த ஆண்டு ஹஜ் கடமைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் சவூதி அரேபிய இராச்சியத்துடன் தொடர்புடைய நிறுவனங்களால் முழுமையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளன. யாத்திரிகர்கள் பாதுகாப்பாக, அமைதியான முறையிலும் ஆன்மிக ரீதியாக நிறைவு பெறும் வகையிலும் ஹஜ் கடமையை நிறைவேற்றக்கூடிய சூழலை உருவாக்குவதற்காக, சுகாதாரம், ஒழுங்கமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

புனித ஹஜ் பயண ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புகள் சிறப்பாக நடைபெறுவதற்காக, சவூதி அரேபிய இராச்சியம் மற்றும் இலங்கையின் அதிகாரிகள் வழங்கிய பயனுள்ள ஒத்துழைப்புக்கு இதயம் கனிந்த பாராட்டுகளையும் தெரிவிக்கிறோம். இந்த ஒத்துழைப்பு, எமது இரு நாடுகளுக்கு இடையிலான உறுதியான மற்றும் நட்பான உறவுகளை பிரதிபலிப்பதாக அமைகிறது.





எனவே இறுதியாக ஹஜ்ஜுக்காக செல்கின்ற அனைத்து யாத்ரிகர்களுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவரது ஹஜ்ஜையும் அல்லாஹ் ஏற்றுக் கொண்டு, எல்லோரது பாவங்களையும் மன்னித்து, பத்திரமாக திரும்பி வர அல்லாஹ் அருள்புரியட்டும் என்றும் நான் பிரார்த்தித்துக் கொள்கிறேன். அல்லாஹ் எமது நாடுகளை அமைதியாலும் வளமையாலும் தொடர்ந்தும் அருள்புரியட்டும். - என்றார்.

## கல்முனை அல் – ஹிலாலில் மாணவர்களுக்கு தடுப்பூசி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்முனை அல்-ஹிலால் வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கருப்பை கழுத்து புற்றுநோய் தடுப்பூசியும், தரம் 7 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வளர்ந்தோருக்கான ஏற்புத்தடை தடுப்பூசியும் ஏற்றும் நடவடிக்கைகள் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இதேவேளை அந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 1,4,7 தரம் 10 வரையான மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் பாடசாலை பற் சிகிச்சையாளரால் சுகாதார கழக அங்கத்தவர்களுக்கு வாய்ச் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை பற் சிகிச்சையாளர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது, பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்களும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.







## கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிறப்புற்ற உலக கை சுகாதார தினம்

(சகாதேவராஜா)

உலக கை சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.



இந்நிகழ்வில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர். சுகுணண் குணசிங்கத்தின் ஆலோசனைக்கு அமைவாக வைத்தியசாலையின் பிரிவுகளுக்கு இடையே கை கழுவும் தொழில்சார் நுட்ப முறைக்கான போட்டி ஒன்று வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு இடையில் இடம்பெற்றது.

மேலும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்களுக்கு இடையேயான கை கழுவும் விழிப்புணர்வு பற்றிய சித்திர போட்டியும் கண்காட்சியும் இடம்பெற்றது. இடம்பெற்ற போட்டிகளின் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு பரிசீல்களும், கௌரவிப்பு சான்றிதழ்களும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது மட்டக்களப்பில் இருந்து வருகை தந்த கிழக்கு பல்கலைக்கழக மருத்துவக்கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும் விசேட அதிதியாக கலந்து கொண்டவருமான நுண்ணுயிரியல் வைத்திய நிபுணர் மருத்துவர் வைதேகி பிரான்சிஸ் அவர்கள் சுகாதார பராமரிப்பு தொற்றுக்கள் சம்பந்தமான விசேட செயல் அமர்வு ஒன்றினையும் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வின் போது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் தாஹிரா சபியுதீன், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் மருத்துவர் ரொஷாந்த், சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் அன்ரன் சுவர்ணன், வைத்தியர்கள், தாதிய பரிபாலகர், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முள்ளிவாய்க்கால் கஞ்சி ஒரு எதிர்ப்பின் நினைவு

**தமிழர்களின் வரலாற்றிலேயே வன்முறை, இறப்புக்கள் மற்றும் மனித உரிமை மீறல்களின் உச்சமாக இருந்த இறுதிப் போர் நாள்களை நினைவுகூரும் இனப்படுகொலைக்கு எதிரான நினைவுவாரம்திங்கட்கிழமைதொடங்கியது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் மனங்களில் சித்திரிக்க முடியாத மன வேதனைகளை ஏற்படுத்திய வன்முறை, சர்வதேச அளவில் மனித உரிமை மீறல்களாகவும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாகவும், இனப்படுகொலைக்கான சாத்தியங்களாகவும்அழைக்கப்பட்டிருக்கின்றன.**

**இந்தத் துயர நினைவுகள், இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி எனும் நினைவுச் சின்னத்தின் ஊடாக சந்ததிகளுக்குகடத்தப்பட்டு வருகின்றன. இறுதிப் போரின் சமயத்தில், முகாம்களில் சிக்கியிருந்த மக்கள் சமைத்த உப்பில்லாத, தேங்காய்ப் பால் சேர்க்காத கஞ்சி, இன்று ஒரு சமூகத்தின் காலச்சுவடு ஆகி விட்டது. உயிரிழந்தவர்களை நினைவுகூர, உணர்வுப்பூர்வமான ஓர் நினைவை நிலைநாட்ட, இன்று பலரும் அந்தக் கஞ்சியையே ஊட்டி அனுசரிக்கின்றனர். இது வெறும் உணவல்ல – ஓர் எதிர்ப்பு, ஓர் விழிப்புணர்வு, ஓர் அரசியல் நினைவெழுச்சி. ஆயுதம்.**

**அந்தக் கஞ்சியின் வாசனை, அதன் சுவை, அதன் ஒட்டுமொத்த வரலாறு– இவையெல்லாம் புது தலைமுறைக்கு ஒரு நினைவுக் கடத்தலை ஏற்படுத்துகின்றன. இதுவேமறைபட்டவரலாற்றைத் தொடர்ந்தும் பேச வைக்கும் ஒரு வாழ்வியல் கருவியாகவும் மாறியுள்ளது.**

**ஆண்டுதோறும் மே 12 முதல் மே 18 வரை அனுசரிக்கப்படும் இந்த வாரம், தமிழர் சமுதாயத்திற்கு மட்டுமல்ல–இந்தத் தீவின் ஒட்டுமொத்த நன்மதிப்பு மற்றும் மனிதநேய அரசியல்மரபுகளுக்கே ஒருசோதனைக்களமாக இருக்கிறது. இந்தத் தீவில் நீடித்த அமைதிக்கு உண்மை, நீதிமுறை, வரலாற்றுச் சாட்சிகள், பொதுமக்களின் அனுபவங்கள் ஆகியவற்றை புரிந்துகொண்டுகையாள்வதேஅடிப்படைஎன்பதை உணர்த்துவதாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி இருக்கின்றது.**

**முள்ளிவாய்க்கால்கஞ்சிஎப்போதும்அடக்கப்பட்ட வரலாற்றின் ஒரு சத்தமில்லா அழைப்பு. அது உணர்வுகளை மட்டுமல்ல –வரலாற்றையும், நியாயத்தையும், எதிர்கால விடுதலையையும் பேசுகிறது.**

# வேகமான எழுத்துக்கும் சிந்தனைக்கும் மூத்த பத்திரிகையாளர் காசிலிங்கம்

*(அவரது அமுதவிழாவைச் சிறப்பிக்கும் கட்டுரை)*

*அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பு அறிவுலகத்தில் ஒரு பெரும் புரட்சியைச் செய்தது. கருத்துப் பரவலுக்கு நூல்கள் - பத்திரிகைகள் முதன்மைக் கருவிகளாயின.*

*ஈழத்தில் அமெரிக்க மிசனரிமார் முதன்முதலாக 1841 இல் (07 - 01 - 1841) 'உதயதாரகை' என்னும் பத்திரிகையை ஆரம்பித்தனர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இது வெளிவந்தது. இதன்*

*ஆசிரியராகக் கரோல் விசுவநாதபிள்ளை விளங்கினார் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

*1930 இல் 'யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின்' பகிஸ்கரிப்புக் கோரிக்கைக்கு வலுவூட்டும் அரசியல் கருத்துகளுடன் 'ஈழகேசரி' வெளிவந்ததாக கூறுவதுண்டு;.*

*ஈழத்தின் அரசியல், சமூக, பொருளாதார, இலக்கிய வளர்ச்சியில் மிகக் கவனம் செலுத்திய ஈழகேசரி இருபத்தெட்டு ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்தது.*

*ஈழத்தில் நவீன தமிழ் இலக்கியத்தின் ஆரோக்கியமான ஆரம்பத்திற்குத் தளமாக ஈழகேசரி அமைந்து படைப்பாளிகளை இனங்காண வைத்தது என்றால் மிகையல்ல.*

*நாளேடுகளாக 1930 இல் வீரகேசரியும் 1932 இல் தினகரனும் தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவரத் தொடங்கின.*

*வேறு சில நாளேடுகளும் வெளிவரத் தொடங்கி சிறிது காலத்திலேயே அவை நிறுத்தப்பட்டுவிட்டன. சகோதரர்கள் இருவரின் (கே. சி. தங்கராஜா, கே. சி. சண்முகரத்தினம்) சிந்தனையில் உருவாகியது 'ஈழநாடு' பத்திரிகை.*

*யாழ்ப்பாணத்திலிருந்து இதன் முதல் இதழ் 09 - 02 - 1959 இல் வெளிவந்தது. வாரப் பத்திரிகையாக வெளிவரத் தொடங்கிப் பின்னர் 1961 இல் தினசரியாக மலர்ந்தது.*

*தலைநகர் கொழும்புக்கு வெளியே ஓர் பிராந்தியத் தமிழ்ப் பத்திரிகையாக 'ஈழநாடு' தன்னை நிலைநிறுத்திக் கொண்டது.*

*தமிழ்பேசும் சகல மக்களின் நலன்கருதி, மக்களின் உணர்வுகளை, வாழ்வுமுறைகளை, சம்பிரதாயங்களைப் பிரதிபலிக்கும் பத்திரிகையாக ஈழநாடு வெளிவரத் தொடங்கியது.*

*1961 ஆம் ஆண்டு யாழ் கச்சேரி முன்றிலில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்ட காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் 'ஈழநாடு' செய்தி சொன்னது. பாடசாலை - கல்லூரி ஆசிரியர்கள், படைப்பாளிகள் கைகளில் மிதந்தது.*

*அந்தக் காலத்தில் ஈழநாடு பல பதிப்புகள் (மாலைப் பதிப்பு - பிராந்தியப் பதிப்பு) என வெளியாகியதுண்டு;.*

*கோகிலாம்பாள் கொலை வழக்கு, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப் பிரவேசப் போராட்டம், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டம், 1971 ஏப்ரல் கிளர்ச்சி, தமிழாராய்ச்சி மாநாடு, பயங்கரவாதத் தடைச்சட்ட அமுல், இளைஞர்கள் கொலை போன்ற நிகழ்வுகளின்போதும் ஈழநாடு மக்கள் கவனத்தை மிகவும் ஈர்த்தது.*

*1984 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'ஈழநாடு 25 ஆவது ஆண்டு நிறைவு மலர்' சிறந்த ஆவணப் பதிவாகும். ஈழநாடு பத்திரிகை செய்தித் தணிக்கைகள், அச்சுறுத்தல்கள் எனப் பலவேறு நெருக்கடிகளைக் கண்டது.*

*குண்டுத் தாக்குதலுக்குமுள்ளானது. தீக்குளித்துமீண்ட ஈழநாடு தொண்ணூறுகளின் தொடக்கத்தில் தன் இயக்கத்தை நிறுத்த வேண்டியதாயிற்று.*

*ஈழநாடு ஆசிரிய பீடத்தை அலங்கரித்தவர்களில் கே. பி. ஹரன், இராஜ அரியரத்தினம், என்.சபாரத்தினம், எஸ். எம். கோபாலரத்தினம் மற்றும் சசிபாரதி சபாரத்தினம், பெருமாள்*



*ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.*

*ஆசிரிய பீடத்தில் இளந்தலைமுறையினர் பலர் உதவி ஆசிரியர்களாக இணைந்திருந்தனர். அந்தத் தலைமுறையினர் பலர் இன்று ஈழத்திலும் உலக நாடுகள் பலவற்றிலும் ஊடகத்துறையில் சிறந்து விளங்குகிறார்கள்.*

*அவர்களில் ஒருவரான எஸ். கே. காசிலிங்கம் 1967 இல் ஈழநாடு ஆசிரிய பீடத்திற்குள் இணைந்துகொண்டார்.*

*அவரை எழுபதுகளின் தொடக்கத்திலிருந்தே யான் நன்கறிவேன். கொழும்புப் பத்திரிகைகளுக்கும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் செய்தியாளராக யான் கடமையாற்றிய காலமது. யாழ் குடாநாட்டுச்*

*செய்திகளை கொழும்புப் பத்திரிகைகள், வானொலிக்கேற்றவாறு எழுதி அனுப்ப ஈழநாடு பெரிதும் உதவியதுண்டு.*

*அதிகாலை ஈழநாடு கிடைத்ததும் எமக்கேற்றவாறு சில செய்திகளை அதிலிருந்து திரட்டிக்கொள்வதுமுண்டு. ஈழநாடு ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த பலரையும் யான் நன்கறிவேன். எந்த வேளையிலும் ஈழநாடு கட்டட மேல்மாடியிலுள்ள அலுவலகத்தினுள் நுழைந்து ஆசிரிய பீடத்திலுள்ளவர்களுடன் உரையாடுவேன். நள்ளிரவு - அதிகாலைப் பொழுதுகளிலுங்கூட அவ்வாறு சென்றதுண்டு. அரசியல் - இலக்கியச் செய்திகளை வழங்கி அழகாகப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்வேன். மறுநாள் அவ்வாறே அவை பிரசுரமாகி மகிழ்;ச்சியளிக்கும்.*

*அங்கு பணிபுரிந்த காசி அண்ணர், அழகாக உடையணிந்த - நிமிர்ந்த வேக நடைக்காரர். ஓட்டமும் நடையுமாக போவார். வேகமாகவே கதைப்பார். எழுத்தும் அப்படியே..!*

*பரபரப்பானசெய்திகளைத்துணிச்சலுடன் வெளிக்கொணர்வதில் அவற்றைச் சூட்டோடு தலைப்பிட்டுப் பிரசுரிப்பதில் வல்லவர். அதனால் சில பிரச்சினைகளைச் - சிரமங்களையும் அவர் எதிர்கொண்டதுண்டு.*

*பத்திரிகைத்துறையிலே-ஊடகத்துறையிலே - பணியாற்றுபவர்கள் பலர் அர்ப்பணிப்புடன்*

## வேகமான...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

பணியாற்றுகிறார்கள் என்பர்.

நெருடல்கள் - நெருக்கடிகள் - பரபரப்புகள் - பதற்றங்கள் - சிலவேளை பயமுறுத்தல்கள் மத்தியிலும் அவர்கள் பணியாற்ற வேண்டிய நிலைமைகள் ஏற்படுவதுண்டு..!

உண்மைகளை யதார்த்தப் பார்வையோடு வெளிக்கொணரும்போது அவை வரலாற்றுப் பதிவுகளாகின்றன. அரசியல், சமூக, பொருளாதார, கலாசார நடைமுறைப் பிரச்சினைகளைத் துல்லியமாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஊடகங்கள் நம்பிக்கையளிப்பனவாக இருத்தல் வேண்டும்.

அந்த வகையில் பத்திரிகைத்துறையில் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த பலரை யான் அறிவேன்.

அவர்களில் ஒருவரான காசி அண்ணர் குறிப்பிடத்தக்கவர்.

1991 இல் யான் பிரான்ஸ் வந்ததும் காசி அண்ணரை 'பாரிஸ் ஈழநாடு' அலுவலகத்தில் மீண்டும் சந்தித்துக்கொண்டேன். 'வந்துவிட்டாயா... ..' என மகிழ்வுடன் கதைத்தார். மூன்று மாத விசாவில் வந்த எனக்கு அகதி அடைக்கலம் கேட்பது குறித்து ஆலோசனைகள் சொன்னார்.

'பாரிஸ் ஈழநாடு ' பத்திரிகையில் பணியாற்றிய அவர் பின்னர் 'தமிழன்' பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றினார். பத்திரிகையில் இலக்கியப் படைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்துப் படைப்பாளிகளை ஊக்குவித்தார்.

பாரிஸ் மாநகரில் நடைபெறும் நூல் அறிமுக விழாக்கள், சங்கங்களின் ஆண்டு விழாக்கள் பலவற்றுக்கும்; காசிலிங்கம் தலைமை வகித்து நடத்த அழைக்கப்படுவார். இலண்டன், ஜேர்மனி, சுவிஸ் ஆதியாம் இடங்களில் நடைபெற்ற விழாக்களிலும் அவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதை யான் அறிவேன்.

மூத்த பத்திரிகையாளர் - ஆளுமை மிக்கவர் - என்ற வகையில் அவருக்கு அந்தக் கௌரவம் வழங்கப்படுவதுண்டு.

தனது நீண்ட காலப் பத்திரிகைத்துறை அனுபவங்கள், வரலாற்று ரீதியாக அரசியல், புலம்பெயர் வாழ்வியல் என்பனவற்றைப் பதிவுசெய்யும் வகையில் 'என்னுள்... என்னோடு... ..' என்ற நூலை 2002 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இதன் அறிமுக நிகழ்வுகள் ஐரோப்பாவின் பல நகரங்களிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எனது நூல்களின் வெளியீட்டு விழாக்கள், அறிமுக நிகழ்வுகள் பலவற்றுக்கும் அவர் தலைமை வகித்துச் சிறப்பித்துள்ளார்.

ஊரில்; சமூக முன்னேற்றத்தை கவனத்தில்கொண்டு செயற்பட்டவர். அனலைதீவின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பத்திரிகையில் செய்திகளைப் பிரசுரித்து நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்தை ஈர்த்தவர். அதனால் அனலைதீவுப் பாடசாலைகளின் வசதிகள், ஆசிரியர் பற்றாக்குறை நீங்க உந்துசக்தியாகச் செயற்பட்டதை யான் அறிவேன்.

'பிரான்ஸ் - அனலைதீவு மக்கள் ஒன்றியம்' சிறப்பாகச் செயற்பட ஊக்கமளித்தார். பிறந்த ஊரின் சிறப்புகளை வெளிப்படுத்துவதில் மகிழ்பவர்.

2014 ஆம் ஆண்டு அனலைதீவு மக்கள் ஒன்றியத்தின் சிறப்பு மலரான 'அனலைத் தென்றல்' மலரைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பொறுப்பை எனக்களித்தார்.

அதன் ஆண்டு விழாவும் 'அனலைத் தென்றல்' வெளியீடும் (22 - 06 - 2014) பாரிஸ் மாநகரில் எஸ்.கே. காசிலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் எனது சில நூல்களின் அறிமுக நிகழ்வும் நடைபெற காசி அண்ணர் ஊக்கமளித்தார்.

இந்நிகழ்வில் 'கல்விச் சேவையாளர்' சி. காராளபிள்ளை நூல்கள் குறித்துச் சிறப்புரையாற்றினார். அவர் அன்பாகப் பழகக் கூடிய பண்பாளர். பத்திரிகை , அரசியல், இலக்கியம் குறித்து வரலாற்று

ரீதியாக அவருடன் உரையாடினால் பல தகவல்கள் பெற்றுக்கொள்ளலாம் என நண்பர்கள் சொல்லிக்கொள்வர்.

பிரான்ஸ் நாட்டில் அவ்வாறு பண்போடு உரையாடுவதற்கு ஏற்ற மூத்த ஆளுமை மிக்கவர்களில் அவர் குறிப்பிடத்தக்கவர்.

அமுத விழா காணும் அன்புள்ளம் மேலும்







பல்லாண்டுகள் வளமுடன் வாழ வாழ்த்துவோம்..!



# கல்முனை பொலிஸ் நிலையத்தில் வெசாக் பண்டிகை கொண்டாட்டம்

(ஷினாஸ்)

தேசிய வெசாக் வாரத்தை முன்னிட்டு கல்முனை தலைமை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த விசேட வெசாக் தின நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பொலிஸ் நிலையத்தின் முன்றிலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றம்ஸீன் பக்கீர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் போது வெசாக் தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது. கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்ததோடு, பொதுமக்களுக்கு அன்னதானத்தினையும் வழங்கி வைத்தார்.

இந்தநிகழ்வில்பெரியநீலாவணைவிசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.எஸ்.ரத்நாயக்க உட்பட இராணுவ உயர் அதிகாரிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெசாக் தினத்தை முன்னிட்டு கல்முனை பொலிஸ் தலைமை அலுவலகத்தில் வெசாக் கூடுகள் கட்டப்பட்டு அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# வெசாக் தினத்தினை முன்னிட்டு வவுனியாவில் நல்லிணக்கத்தை வலியுறுத்தி தன்சல் வழங்கல்

வெசாக் தினத்தை முன்னிட்டு வுவனியாவில் நல்லிணக்தை வலியுறுத்தி நேற்று (திங்கட்கிழமை) தன்சல் வழங்கப்பட்டது.

வவுனியா, ஏ-9 வீதியில் மூன்றுமுறிப்பு பிள்ளையார் ஆலயம் அருகில் வைத்து இந்து மதகுருமார்கள், புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், தமிழ் சிவில் அமைப்புக்கள் மற்றும் தமிழ் மக்கள்இணைந்துஇதனைவழங்கியிருந்தனர்.

தென்பகுதியில் இருந்து வடக்கிற்கு வரும் பௌத்த சகோதர, சகோதரிகளுக்கு இதன்போது குளிர்பானம், பிஸ்கட் என்பவற்றை வழங்கி தமது நலலிணக்கத்தை வெளிப்படுத் தியிருந்தனர். 100-










# ஹற்றன் மாணிக்கபிள்ளையார் முத்தேர் பவனியில் அருளளிப்பு

(கிஷாந்தன்)

ஹற்றன் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் முத்தேர் பவனி மேளதாள இசை முழங்க சிறப்பாக நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தின் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் சித்திரா பௌர்ணமி தினத்தினை முன்னிட்டு முத்தேர் திருவிழா மேளதாள இசை முழங்க, பக்த அடியார்களின் அரேகரா பக்தி பரவசத்துடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

குறித்த தேர் பவனி ஆலயத்தில் நடைபெற்ற திரவிய அபிசேகம் வசந்த மண்டப பூஜை உள் வீதி உலா வருதல் ஆகியன இடம்பெற்று தேர் திருவிழா ஆரம்பமானது.

இந்த தேர் பவனி ஹற்றன் மல்லியைப்பூ சந்தி வரை சென்று மீண்டும் திரும்பி ஹற்றன் புறநகர் வழியாக எம்.ஆர்.டவுன் வரை சென்று பிரதான வீதியூடாக ஆலயத்தினை வந்தடைந்தது.

கடந்த 02 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான சித்திரா பௌர்ணமி தேர் திருவிழா, சனிக்கிழமை கங்கை நீர் எடுத்தல் வேட்டை திருவிழா ஆகியன இடம்பெற்று ஞாயிற்றுக்கிழமை தேர் பவனி ஆரம்பமானது, 12 ஆம் திகதி பால்குட பவனியும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த தேர் திருவிழாவில் பல்வேறு பகுதிகளை சேர்ந்து ஏராளமான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் கலை கலாசார நிகழ்வுகள் நடன நாட்டிய நிகழ்வுகள் அன்னதான நிகழ்வுகள் இடம்பெற்றன.





# கலைவாணி முன்பள்ளி வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் கலைவாணி முன்பள்ளியின் அதிபர் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றது.

கலைவாணி முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு 34 வருடங்கள் பூர்த்தியான நிலையில் இந்த நிகழ்வு மிகவும் சிறப்பான ஒரு விடயமாக அமைந்தது.



# கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபு கல்லூரி மாணவன் குர் ஆன் மனனப் போட்டியில் அபரிமித சாதனை

(சியாஜ்)

அகில இலங்கை ரீதியில் ஜம்இய்யதுல் குர்ராஃ ஏற்பாட்டில் இடம்பெற்ற குர்ஆன் மணைப்போட்டியில்கற்பிட்டி ரஹ்மானிய்யா அரபுக் கல்லூரி மாணவர் மொஹமட் மஹ்றூப் மொஹமட் அக்ஸான் மூன்றாம் இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.



நூற்றுக்கு மேற்பட்ட மத்ரஸாக்களிலிருந்து சுமார் 500 மாணவர்களுக்கிடையில் மிக விறுவிறுப்பாக நடைபெற்ற குர்ஆன் மணைப் போட்டியின் நடுவர்களாக சர்வதேச நடுவர் சங்கத்திலிருந்து வருகைதந்த கட்டார் மற்றும் சவூதி அரேபியா நாடுகளிலிருந்து வருகை தந்த நடுவர்கள் என்பதும் சாதனையாளர் கௌரவிப்பு கொழும்பு பிஸப் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# முன்னைய ஆட்சியாளர்கள் பெறாதவெற்றியை நாம் பெற்றுள்ளோம் இந்த உள்ளாட்சி தேர்தலில்

## இளங்குமரன் எம்.பிக்கு இப்படியும் ஒரு பெருமிதம்

(சுபேசன்)



கடந்த கால அரசாங்கங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றிராத ஒரு மகத்தான வெற்றியை தேசிய மக்கள்சக்தி இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெற்றுள்ளது. அந்தவகையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியைப் போன்று இதுவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வரலாற்று வெற்றியே ஆகும் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; –

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மீதான அலை ஆறே மாதங்களில் ஓய்ந்துவிட்டதாக சிலர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

தமது தோல்வியை மறைக்கவே அவர்கள் இவ்வாறான விமர்சனத்தை முன்வைக்கின்றனர்.

கடந்த கால அரசாங்கங்கள் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் இவ்வளவு ஆசனங்களைப் பெற்றிருக்கவில்லை.

தமிழ் கட்சிகள் அஞ்சும் அளவிற்கு கடந்த அரசாங்கங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்தடம் பதிக்கவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தி ஒன்றே தமிழ் கட்சிகளுக்கு தோல்வி பயத்தைக் காட்டியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் அவர்கள் மனதில் இன்றும் ஓடிக்கொண்டிருக்கும் என நினைக்கிறேன்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சபைகளிலும் முதற்தடவையாக நாம் போட்டியிட்டோம். முதல் தடவையிலேயே 20சதவிகிதமான ஆசனங்களைக் கைப்பற்றி தமிழ் கட்சிகளுக்கு மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தியுள்ளோம்.

தமிழ் கட்சிகள் கடந்த காலத்தைப் போன்று தனி ஒரு கட்சி ஆட்சி அமைக்க முடியாமல் போகக் காரணம் எமது வெற்றி. எமது ஆதிக்கம் காரணமாகவே கடந்த காலத்தில் சுயநலத்திற்காக பிளவடைந்த தமிழ் கட்சிகள் இன்று ஒன்று சேர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2018 இல் இடம்பெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய கட்சிகள் வட்டாரத்தை வென்றது மிக அரிது. ஆனால் நாம் நேரடியாக பல வட்டாரங்களை வென்றுள்ளோம். காலா காலமாக தேசியம் பேசி மக்களை ஏமாற்றியவர்களை தோற்கடித்துள்ளோம்.

எமது வேட்பாளர்கள் பரம்பரை பரம்பரையாக அரசியல் செய்தவர்கள் அல்லர். அவர்கள் அரசியலுக்கு புதியவர்கள். ஆனால் நேர்மையானவர்கள். பெரும்பாலும் இளைஞர்களுக்கு வாய்ப்பளித்தோம்.

இந்த வெற்றி எமக்கு மிகப்பெரிய ஒரு வரலாற்று வெற்றி. அதேநேரம் தமிழ்த்தேசியம் பேசுபவர்களுக்கு நாடாளுமன்ற தேர்தல் போன்று இதுவும் ஒரு பலத்த அடி என்பதனை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பொது நூலகத்தில் மாணவர்கள்

(சியாஜ்)

புத்தளம் போல்ஸ் வீதியில் அமைந்துள்ள பீனிக்ஸ் சர்வதேச பாடசாலையின் மாணவர்கள் புத்தளம் பொது நூலகத்துக்கு வெள்ளிக்கிழமை காலை விஜயம் செய்தனர்.

தமது ஆசிரியர்கள் சகிதமாக நூலகத்துக்கு விஜயம் செய்த தரம் 03 தொடக்கம் தரம் 09 வரையான மாணவர்களை பிரதம நூலகர் கே.எம்.நிஸாத் உள்ளிட்ட கடமையில் இருந்த அதிகாரிகள் வரவேற்றனர்.

பீனிக்ஸ் சர்வதேச பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நூலகத்தின் சிறுவர் பகுதி, இரவல் பிரிவு, உசாத்துணை பிரிவுகளின் சேவைகள் மற்றும் நூலக வளங்கள் தொடர்பாகவும் பிரதம நூலகரால் விளக்கமளிக்கப்பட்டன.

வருகை தந்த மாணவர்கள் அனைவரும் அன்றைய தினம் நூலக அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.





# புத்தளத்தில் உலமாக்களுக்கு இலவச மருத்துவ முகாம்

(சியாஜ்)



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகர கிளையும் புத்தளம் தளவைத்தியசாலையும் இணைந்து அண்மையில் உலமாக்களுக்கான (ஆலிம்களுக்கு மட்டும்) இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக்கிளையின் காரியாலயத்தில் இந்த இலவச மருத்துவ பரிசோதனை இடம்பெற்றது.

நீரிழிவு, இரத்த அழுத்தம், பிரஸர், கொலோஸ்ட்ரோல் ஆகிய நோய்களுக்கு இலவசமாக வைத்திய சேவைகள் இடம்பெற்றன.





## குருந்தூர்மலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10.05.2025சனிக்கிழமையன்றுமூன்றுதமிழ் விவசாயிகள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரும் 11.05.2025 அன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஒருவர் விடுவிக்கப்பட்டார், இருவர் விளக்கமறியல் வைக்கப்பட்டனர். குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாயக்காணிகள்பூர்வீகமாகத்தமிழ்மக்கள் விவசாயம் செய்துவந்த காணிகளாகும். இந் நிலையில் தொல்லியல் திணைக்களத்தினர் அடாத்தாகஎல்லைக்கற்களையிட்டுஅபகரித்து வைத்துள்ளனர்.

குறித்த விவசாய நிலங்களில் கடந்த வருடம்கூட விவசாயிகளால் பயிற்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் நிலையில் இவ்வருடமும் குறித்த வயற் காணிகளில் விவசாயம் செய்யும்நோக்கில் பண்படுத்திய விவசாயிகளே இவ்வாறு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச்சென்று இவ்வாறு கைதுசெய்யப்பட்ட விவசாயிகளைப் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடியதுடன், எமது விவசாயிகளது சுதந்திரமான தொழில்செய்யும் உரிமை மறுக்கப்படுவதுதொடர்பில்எனதுவன்மையான கண்டனங்களையும் தெரிவித்திருந்தேன்.

பௌத்த பிக்குகளின் முறைப்பாட்டிற்கமையவே இவ்வாறு பொலிசாரால் எமது விவசாயிகள் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். எமது தமிழ் மக்கள் காலங்காலமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவந்த பூர்வீக விவசாய நிலங்களில் தொல்லியல் திணைக்களம் அத்துமீறியே எல்லைக்கற்களையிட்டுள்ளது. அவ்வாறு தொல்லியல் திணைக்களத்தால் அத்துமீறி இடப்பட்ட பகுதிக்குள் விவசாயிகள் பண்டுத்தலில் ஈடுபட்டது தவறு என்றால் தொல்லியல் திணைக்களமே அது தொடர்பில் முறைப்பாடுசெய்திருக்கவேண்டும். இங்கு அதுதொடர்பில்பௌத்தபிக்குகளேமுறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு பௌத்த பிக்குகள் முறைப்பாடுசெய்து பொலிசார் கைதுசெய்வதெனில், தொல்லியல் திணைக்களம்பௌத்தபிக்குகளின் கூடாரமா எனக் கேட்டுக்கொள்ளவிரும்புகின்றேன்.

இங்கு தமிழ் மக்களின் பூர்வீக விவசாயக் காணிகளைப் பறித்ததோடு மாத்திரமின்றி, அக்காணிகளுக்குரிய தமிழ் மக்கள், வாழ்வாதாரத்திற்காக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றபோது பௌத்த பிக்குகளின் முறைப்பாட்டிற்கமைய பொலிஸாரால் கைதுசெய்யப்படுகின்ற அவலமும் அரங்கேறுகின்றது. இந்த விடயத்தில் உரியவர்கள் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறாக இனவாதத்தைவெளிப்படுத்திக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளுக்கெதிராக ஆளும்தரப்பு உடனடியாகநடவடிக்கையெடுக்கவேண்டும்.

ஏன்எனில் இனவாதத்தை எவரும் வெளிப்படுத்தக்கூடாது, அனைத்து இன மக்களையும் சேர்த்துக்கொண்டு பயணிப்போமென்று கூறிக்கொண்டு ஆட்சிசெய்துகொண்டிருக்கும் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனமெடுக்கவேண்டும். இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்கும்பௌத்த பிக்குகளுக்கு எதிராகநடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றார்.

## கள்வர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்ற ஆளும்தரப்பின் மமதையை மக்கள் இல்லாமலாக்கியமைக்குநன்றிகூறவேண்டும். ஆளும்தரப்பு வெறும் பேச்சு மாத்திரமே என்பதை மக்கள் உணர்ந்துள்ளதால்தான் 23 இலட்சம் வாக்குகளைக் குறைத்துள்ளனர்.

6 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் மக்கள் ஆளும்தரப்புக்குச் சிறந்த பாடம் புகட்டியுள்ளனர். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துச் செயற்படவேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

இப்போதாவது அவர் அதனை ஏற்றுக் கொண்டுள்ளமை பெரிய விடயமாகும். மக்கள் அரசாங்கத்தை புறக்கணித்துள்ளதால் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைப்பதில் சிக்கல் இல்லை என்றார்.

## ரூ. 87 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணாடி இழை படகு ஒன்று கடற் படையினரால் கைப்பற்றப்பட்டது.

அதன்படி, வடமத்திய கடற்படை கட்டளையின், இலங்கை கடற்படை கப்பல் கஜபா நிறுவனத்தினால் பேசாலை கடற்கரை பிரதேசத்தில் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, அந்த கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்று அவதானித்து சோதனை செய்யப்பட்டது.

அங்குப் படகிலிருந்து எட்டு பொதிகளில் பொதி செய்யப்பட்டிருந்த 218 கிலோ 800 கிராம் கேரள கஞ்சாவைக் கடற்படையினர் கைப்பற்றினர். கடற்படையின் நடவடிக்கைகளால் படகை கரைக்கு கொண்டுவர முடியாததால், கடத்தல்காரர்கள் பேசாலை கடற்கரையில் படகுடன் கேரள கஞ்சாவினை கை விட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கடற் படையினரால் மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 87 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. மேலும், கேரள கஞ்சா பொதிகள் மற்றும் படகு ஆகியன மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக பேசாலை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட உள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# தமிழ் கட்சிகளுடன் பேசி வருகின்றோம் ரிஷாத் எம்.பி. கிண்ணியாவில் தெரிவிப்பு

(ஹலால்தீன்)



அகில இலங்கை மக்கள்காங்கிரஸின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் ரிஷாத் பதுருதீன் இன்று காலை 11:30 மணிக்கு கிண்ணியாவுக்கு வருகைதந்து நடந்து முடிந்தஉள்ளூராட்சி சபை தேர்தல் சம்பந்தமாக கட்சி உறுப்பினர்களுடன்கலந்துரையாடி ஆட்சிஅமைப்பதுசம்பந்தமாகவும் ஆலோசனையும்மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடல் கிண்ணியா மல்டி சென்ரரில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள், வெற்றி பெறாத வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர் கள்உட்படப்பலர்கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது -

வடக்கு கிழக்கில் உங்கள் கட்சி ஆட்சி அமைப்பதில் உங்கள் கட்சியின் வியூகம் என்ன? எவ்வாறு உள்ளது என கேள்வி எழுப்பப்பட்ட போது இவ்வாறு தெரிவித்தார்.

அதிகபட்சஆதரவுகிடைத்துள்ள இடங்களில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு நான் முதலான இடங்களில் நாங்கள் தலைமை பதவியை பெறுவதற்கும் சில இடங்களிலேஆட்சியின்பங்காளிகளாக மாறி பிரதி தவிசாளர் பதவிகளைப் பெறுவதற்கும் சில இடங்களில் ஆட்சியினுடைய பங்காளிகளாக மாறுவதற்கும் பேச்சுகளை கட்சி தலைமை நடத்தி வருகிறது.

அந்த வகையில் நாங்கள் குறிப்பாக தமிழ் பேசும் கட்சிகளோடு முதலாவது பேச்சு ஆரம்பித்து இருக்கிறோம்.அதே போல ஏனைய கட்சிகளுடன் பேசி,நாட்டுக்கும் மக்களுக்கும் அந்தந்த பிரதேசங்களுக்கும் நல்லது செய்யக்கூடிய தவிசாளர்களை நியமித்து பிரதேசசபையின் ஊடாக மக்களுக்கு உச்ச பயனைப் பெற்றுக்கொடுக்கநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

# பிரதமர் ஹரிணி கம்பளை வைத்தியசாலைக்கு சென்று காயமடைந்தவர்களை பார்வையிட்டார்

(கேதீஸ்)

புசல்லாவ,கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறம்பொடை,கெரண்டி எல்ல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலைஇடம்பெற்றபேருந்துவிபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 35 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்த நிலையில் கொத்மலை,கம்பளை, நாவலப்பிட்டிய மற்றும் நுவரெலியா வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் பஸ் விபத்தில் படுகாயமடைந்து கம்பளை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை பிரதமர் ஹரிணி அமரசூரிய ஞாயிற்றுக்கிழமை இரவு நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.





போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் பிரதியமைச்சர் பிரசன்ன குணசேன ஆகியோரும் பிரதமருடன் சென்றிருந்தனர்.





# வவுனியாவில் இளங்கோ அடிகளார் நினைவு தினம் நேற்று அனுஸ்டிப்பு

தமிழில் தோன்றிய முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகளார் சித்திரை முழுநிலா நாளில் நினைவு கூரப்படுகின்றார்.

அந்தவகையில் வவுனியா சின்னப் புதுக்குளம், சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளின் திருவுருவச் சிலைக்கருகிலும் குறித்த நிகழ்வானது நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றிருந்தது.

இதன்போது இளங்கோ அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சிறப்புரைகளும் இடம்பெற்றிருந்தன.

வவுனியா மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உத்தியோகத்தர்கள்,தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். 100








# அம்பாறை மாவட்டத்தில் உதைபந்தாட்ட நடுவர் சங்க புதிய நிர்வாகம் தெரிவு

(ஷினாஸ்)



அம்பாறை மாவட்ட உதை பந்தாட்ட நடுவர் சங்கத்தின் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கான ஒன்றுகூடல் ஞாயிற்றுக்கிழமை மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தின் கட்டடத் தொகுதியில் அமைந்திருக்கும் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது

அம்பாறை மாவட்ட நடுவர் சங்கத்தின் தலைவரும் சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியருமான எம்.பி. எம்.றஸீட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்டத்தில் உதைபந்தாட்ட துறையில், நடுவர் சங்கத்தின் வகிபங்கு மற்றும் நீண்ட காலமாக மைதானத்தில் விளையாடிய அனுபவத்தோடு நடுவர் சங்கத்தில் இணைந்து செயற்படும் உறுப்பினர்கள் தொடர்பிலும், எதிர்காலத்தில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை நடத்தும் போது போட்டிகளுக்கு நடுவகம் வகிக்கும் நடுவர்கள் குறித்தும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதையடுத்து மாவட்ட உதை பந்தாட்ட நடுவர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. உதைபந்தாட்ட நடுவர் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகராக அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் எம்.ஐ. அப்துல் மனாப் தெரிவு செய்யப்பட்டதோடு தவிசாளராக சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எம்.ஏ.பார்ஸான் தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் தலைவராக தொடர்ந்தும் எம்.பிஎம்.றஸீட் தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் பொதுச் செயலாளராக சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எம்.எம்.எம்.றியாஸ் தெரிவுசெய்யப்பட்டார். பிரதித் தலைவராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர் யூ.எஸ்.சபீல் தெரிவானார். உப தலைவராக சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் எஸ். எம். அஸீம் தெரிவானார்.

இணைப்பாளராக சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் சி.எம் .அஸ்கர் ஆசிரியர் தெரி வானதுடன் உபசெயலாளராக இலங்கை போக்குவரத்து அதிகார சபையின் உத்தியோகத்தர் எஸ்.எம் குசையின் தெரிவானார்.

இதேவேளை அம்பாறை மாவட்ட உதை பந்தாட்ட நடுவர் சங்கத்தின் பொருளாளராக எம்.என்.எம். சபா தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக செயற்படுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது நடுவர் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் பிரதி தலைவர் ஆகியோர் தமது கருத்துக்களை தெரிவித்தனர். இராப்போசனத்தோடு நிகழ்வு நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.






காலைக்கதிர் Kalaikkathir

# மக்களிடையே பிரிவினை ஏற்பட ஊடகங்கள் துணைபோகக்கூடாது

## வைத்திய அத்தியட்சகர் சுகுணன் தெரிவிப்பு

(காரைதீவு சகா)

ஜனநாயகத்தின் நான்காவது தூண் ஊடக மாகும். ஊடகங்கள் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த துணைபோகக் கூடாது. அந்த வகையில் கல்முனை நெற் இணையத்தளமானது சமூகப் பொறுப்புடன் இயங்கி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

–இவ்வாறுகல்முனைநெற்ஊடகத்தின்பத்தாவது ஆண்டு ஆரம்ப விழாவில் அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் ஏற்பாட்டில் மேற்படி விழா கடந்த சனிக்கிழமை அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவிய லாளர்பேரவைத்தலைவரும்சிரேஸ்டஊடகவியலாள ருமான வி.ரி.சகாதேவராஜா தலைமை யில் தம்பலவத்தை தென்னந்தோப்பில் நடைபெற்றது.



ஏனைய அதிதிகளாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் இரா.முரளீஸ்வரன், கல்முனை வடக்கு பிரதேசசெயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.குணபாலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக இயக்குனர் சபைக் கூட்டம் ஓய்வு நிலை அதிபர் கே.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. உலகறிந்த எழுத்தாளர்தமிழ்மணி உமாவயதராஜன் ,தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதமஆசிரியர் க.குணராசா ஆகியோர் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனைகளை முன்வைத்தனர்.

கல்முனை நெற் ஊடகவலையமைப்பின் ஸ்தாபக பணிப்பாளர் ஊடகவியலாளர் புவிநேசராசா கேதீஸ்ஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் டாக்டர் சுகுணன் மேலும் பேசுகையில் தெரிவித்தவை வருமாறு –

கல்முனை நெற் பத்து வருட வரலாற்றில் ஊடக தர்மம் மாறாது சமூக பொறுப்புடன் இயங்கி வருகிறது.

இடையில் ஊடகமையம் உதயமானது. அது ஊடகத்துறை பரிணாமவளர்ச்சியில் முக்கிய மைல்கல் எனலாம். ஊடகசுதந்திரம் நிலவுகின்றஅதேவேளைஊடகதர்மமும்கடைப்பிடிக்கப்படவேண்டும். அப்போதுதான் மக்களுக்கு சரியான தகவல்கள் பாரபட்சமின்றிச் செல்லும்.

ஊடகங்களுக்கு நக்கீரப்பார்வை வேண்டும்.கழுகுப் பார்வையும் வேண்டும். உண்மையை உலகுக்குக்கொண்டுவருவதில் ஊடகங்களுக்கு தனிப்பங்குண்டு.



கல்முனை வரலாற்றில் கல்முனைநெற் ஊடகத்திற்கென தனித்துவத்துடன்கூடிய தனிச்சிறப்புண்டு. மறைந்துகிடக்கின்ற சமூகம்சார் பல அநீதிகளை பாரபட்ச அம்சங்களை வெளிக்கொணர்ந்திருக்கிறது. அந்தவகையில் அதன் ஸ்தாபகர் கேதீஸ்மற்றும்உறுதுணையாயிருக்கின்றசிரேஸ்டஊடகவியலாளர் ஜனாதிபதி ஊடகவிருதுபெற்ற சகா மற்றும் உமா வரதராஜன் குணராசா போன்ற ஊடகவியாளர்கள் மற்றும் நிருவாகக்குழுவினர் பாராட்டுக்குரியவர்கள்.

கல்முனைநெற் செய்திகளுக்கு அப்பால் சமூகசேவைகள் பலவற்றையும் செய்துகொண்டிருக்கிறது.

பணிப்பாளர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் பேசுகையில் –

நாம் அன்று செய்திகளைப்பெற்ற முறைவேறு. இன்று தொழினுட்பம் நவீனமயப்படுத்தப்பட்டுவிட்டது. வடக்கில் பிராந்திய பத்திரிகைகளுக்கு உள்ள மௌசு தனிரகம். ஆனால் துரதிஸ்டவசமாக கிழக்கில் இன்று பிராந்திய பத்திரிகை இல்லை. ஊடகங்கள் வளர்ந்த அளவிற்கு ஊடகவியலாளர்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை. ஊடகவியாளர்களிடையே ஒற்றுமை அவசியம். பிரிந்துநின்று எதனையும் சாதிக்கமுடியாது. எமது கல்முனை வைத்திய சாலை வரலாற்றில் கல்முனை நெற்றின் பங்களிப்பு ஒத்துழைப்பு அபரிமிதமானது. நன்றிகள். – என்றார்.

கல்முனை வடக்கு பிரதேசசெயாளர் அதிசயராஜ் பேசுகையில் –

காலத்தின் அவசியதேவை கருதி கல்முனைநெற் ஊடகமையத்தையும் திறந்து மேலும் பரிமாணம் பத்திரிகையும் வெளியிட்டது. இது மேலும் விரிவுபடுத்தப்படும் எனநம்பலாம். இதுமேலும் வளர வாழ்த்துக்கள். – என்றார்.

பணிப்பாளர் ச.நவநீதன் பேசுகையில் –

உலகம் அவ்வப்போது இவற்றைப்படுத்திக் கொண்டிருக்கிறது. தகவல்தொழினுட்பமும் அப்படியே. எனவே நாமும் அதற்கேற்ப மாறி ஒத்திசைந்துபோகவேண்டிய பொறுப்புள்ளது. – என்றார்.

விழாவில் பணிப்பாளர் டாக்டர் சுகுணன் அனுசரணையாளர் என்.விஜயகுமாரன்( சுவிஸ்) மற்றும் ஊடகவியலாளர் என்.சௌவியதாசன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2025இல் வெளியிடப்பெற்றது